**தேசிய தின விருதுகள் 2026**
**விருது வழங்கும் சடங்கு**

*தலைமை தாங்குபவர்*

தர்மன் சண்முகரத்னம்
சிங்கப்பூர்க் குடியரசு அதிபர்

தொழில்நுட்பக் கல்விக்கழகம் (மத்திய வளாகம்)

22 நவம்பர் 2026

வருடுங்கள்: புகழுரைகள் (தமிழில்)

புகழுரைகள் (தமிழில்)

## தெமாசெக் விருது (தனிச்சிறப்புடன்)

1. **திரு சுந்தரேஷ் மேனன்** தலைமை நீதிபதி

புகழுரை

சிங்கப்பூரின் நான்காவது தலைமை நீதிபதியாக, திரு சுந்தரேஷ் மேனன் சிங்கப்பூரின் சட்ட, நீதித்துறைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்புகளை ஆற்றியுள்ளார்.

2012 முதல் 2026 வரை பெருமாற்றம் நிறைந்த காலகட்டத்தில், தலைமை நீதிபதி மேனன் நீதித்துறையை வழிநடத்தினார். அவருடைய பரந்துபட்ட சீர்திருத்தங்கள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீதித்துறையின் சேவைத் திறத்தைப் பண்படுத்திய அதேவேளையில், நீதிமன்றங்களின் அணுகல்தன்மை, பொறுப்புணர்வு, செயற்றிறன் ஆகியவற்றையும் மேம்படுத்தின.

அவருடைய தலைமைத்துவத்தில் உயர்நீதிமன்ற மேல்முறையீட்டுப் பிரிவும் சிங்கப்பூர் நீதித்துறைப் பயிற்சிக்கழகமும் நிறுவப்பெற்றன. சிங்கப்பூர் அனைத்துலக வணிக நீதிமன்றத்தையும் அதன் அனைத்துலகக் குழுவையும் மேம்படுத்துவதில், அவர் ஆற்றிய முக்கிய பங்கு, உலகளாவிய சர்ச்சைகள் தீர்வு நிலையமாக சிங்கப்பூரின் நிலையை வலுப்படுத்தியது. குடும்ப நீதிமன்றங்களும் இளையர் நீதிமன்றங்களும் நலம்பேணும் நீதிமுறையைப் பின்பற்றி, பூசல்களைக் களையவும் நியாயமான, பயன்மிக்க விளைவுகளை நல்கவும் முற்பட்டன.

தலைமை நீதிபதி மேனன் தமது தீர்ப்புகள், உரைகள், எழுத்துகள் ஆகியவற்றின்மூலம் சட்டக் கோட்பாடுகள், நீதித்துறை அறநெறிகள், தொழில்நுட்ப மாற்றத்தின் விளைவுகள் குறித்த சட்டவியல் கூறுகளுக்கு அளப்பரிய பங்காற்றி, சிங்கப்பூரின் சட்ட சிந்தாந்தத்தையும் உலகளாவிய நன்மதிப்பையும் வலுப்படுத்தியுள்ளார்.

சிங்கப்பூரின் சட்டக் கோட்பாடுகளுக்கும் நீதித்துறை நிர்வாகத்திற்கும் காலம் கடந்தும் நிலைத்திருக்கவல்ல பங்களிப்புகளை ஆற்றியதன் பேரில், தலைமை நீதிபதி சுந்தரேஷ் மேனன் அவர்களுக்குத் தெமாசெக் விருது (தனிச்சிறப்புடன்) வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றது.

2. **திரு எடி டியோ சான் செங்** முன்னாள் தலைவர்,
அதிபர் ஆலோசனை மன்றம்

புகழுரை

திரு எடி டியோ சான் செங் பல்லாண்டு காலமாக சிங்கப்பூருக்குத் தன்னிகரற்ற சேவையாற்றியுள்ளார்.

சிங்கப்பூர் வரலாற்றில் ஒப்புவமையற்ற ஆளுமையாக, பாதுகாப்பு, உளவுத்துறைப் பிரிவையும், உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையையும் ஒருசேர வழிநடத்திய பெருமைக்குரியவர், திரு டியோ. சிங்கப்பூரின் முன்னோடித் தலைவர்கள் அவர்மீது வைத்திருந்த மீட்டெடுக்கவியலாத நம்பிக்கையின் நற்சான்றாக, அப்பொறுப்புகள் திகழ்ந்தன. சிங்கப்பூரின் உள்நாட்டு, வெளிநாட்டுப் பாதுகாப்பிற்கு அவர் ஆற்றிய பங்களிப்புகள் காலம் கடந்தும் நிலைத்திருக்கும் வல்லமை பெற்றுள்ளன. பிற்காலத்தில் அவர் தற்காப்பு அமைச்சு, பிரதமர் அலுவலகம் ஆகியவற்றின் நிரந்தரச் செயலாளராக அதிமுக்கியத்துவம் வாய்ந்த தற்காப்பு விவகாரங்கள், தேசியப் பாதுகாப்பு, அரசாங்கம் முழுவதற்கும் முன்னுரிமை வகிக்கும் விவகாரங்கள் ஆகியவற்றைத் திறம்பட முன்னெடுத்துச் சென்றார்.

அரசாங்கச் சேவை ஆணையத்தின் தலைவராக, அவர் நாணயம், நற்சேவை, உன்னதத்தன்மை ஆகியவற்றில் வேரூன்றிய, விழுமியங்கள் அடிப்படையிலான அரசாங்கச் சேவையை நிர்மாணிக்கத் துணைபுரிந்தார். அதேவேளையில், அரசாங்கச் சேவைத்துறையில் பன்முகத்தன்மை வாய்ந்த திறனாளர்களை அதிகளவு பிரதிபலிக்கும் பண்பை முன்னிறுத்த அயராது பாடுபட்டார்.

2019 முதல் 2026 வரை, அதிபர் ஆலோசனை மன்றத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்த அவர், அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அதிபர் அவர்தம் கடமைகளைச் செவ்வனே ஆற்றத் தேவையான ஆதரவை அளிக்கும் பொருட்டு, அமைதியாகவும் அறிவார்ந்த முறையிலும் ஆலோசனை நல்கி வந்துள்ளார். கொவிட்-19 பெருந்தொற்றுக் காலகட்டத்தின்போது, நாட்டின் நிதியிருப்புகளைப் பயன்படுத்தக் கோரிய, அரசாங்கத்தின் முன் எப்போதும் இல்லாத அளவிலான நிதிசார் பரிந்துரைகளை, கவனமாகப் பரிசீலித்த மன்றத்தின் முறைமைகளை அவர் செவ்வனே வழிநடத்தினார். அத்தகைய விவாதங்களில் தெளிவான சிந்தனை, தீர்க்கமான கடப்பாடு, திடமான தீர்வுகள் ஆகியவற்றுக்கு வித்திட்ட பெருமகனார், திரு டியோ. மேலும், அரசாங்கச் சேவையில் முக்கியமான பதவி நியமனங்கள் உள்ளிட்ட அதிபரின் பிற பொறுப்புகளுக்கான மன்றத்தின் ஆலோசனையிலும் அதே திறத்தை அவர் உறுதிசெய்தார்.

உள்நாட்டு, வெளிநாட்டுப் பாதுகாப்பு, தற்காப்பு, பொது நிர்வாகம், ஆளுமை ஆகிய பல்வேறு களங்களில் சிங்கப்பூருக்கு ஆற்றிய தன்னிகரற்ற சேவையின் பேரில், திரு எடி டியோ சான் செங் அவர்களுக்குத் தெமாசெக் விருது (தனிச்சிறப்புடன்) வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.

3. **திரு ஆலன் சான் ஹெங் லூன்** தலைவர்,
நிலப் போக்குவரத்து ஆணையம்

புகழுரை

நிலப் போக்குவரத்து ஆணையத்தின் தலைவராக, திரு ஆலன் சான் ஹெங் லூன் சிங்கப்பூருக்கு மேலும் பாதுகாப்பான, நம்பகமான, நீடித்த நிலைத்தன்மையுடைய நிலப் போக்குவரத்துக் கட்டமைப்பை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை ஆற்றியுள்ளார்.

ஏப்ரல் 2016 முதல் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பெற்ற திரு சான், ரயில் சேவைகளின் நம்பகத்தன்மையை மேம்படுத்த நிலப் போக்குவரத்து ஆணைய நிர்வாகத்துடனும் பொதுப் போக்குவரத்து நிறுவனங்களுடனும் அணுக்கமாகச் செயல்பட்டார். அவருடைய தலைமைத்துவத்தின்கீழ், சேவைத் தடைகளுக்கு இடையிலான சராசரி பயண அளவு (ரயில் சேவைகளின் நம்பகத்தன்மைக்கான அளவீட்டுமுறை), 2017 முதல் 2026 வரை முறையே 393,000 கிலோமீட்டரிலிருந்து 2 மில்லியன் கிலோமீட்டருக்கு உயர்த்தப்பட்டது. இது உலக நிலையில் மிக உயர்ந்த அளவுகளில் ஒன்றாகும்.

தாம்சன்-ஈஸ்ட் கோஸ்ட் ரயில் பாதை, வட்ட ரயில் பாதையின் நிறைவு, சிங்கப்பூர் ரயில் சோதனை நிலையம், நட்பார்ந்த சாலைகள் திட்டத்தின் விரிவாக்கம் உள்ளிட்ட முக்கிய போக்குவரத்துத் திட்டங்களின் செயலாக்கத்திற்குத் திரு சான் வழிகாட்டியுள்ளார். மேலும் தூய்மையான போக்குவரத்து நோக்கிய மாற்றத்தையும் அவர் முன்னெடுத்துச் சென்றார். அதன் விளைவாக, புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களில் மின்சார வாகனங்களின் எண்ணிக்கை 60 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

2010ஆம் ஆண்டு முதல், பொதுச் சேவை ஆணைய உறுப்பினராகவும் சேவையாற்றி, ஆணையத்தின் கல்விமான்களைத் தேர்ந்தெடுப்பதிலும் பொதுத் துறையின் மூத்த தலைவர்களை நியமிப்பதிலும் திரு சான் பங்களித்துள்ளார்.

சிங்கப்பூரின் நிலப் போக்குவரத்துக் கட்டமைப்புக்கும் பொதுச் சேவைத் துறைக்கும் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புகளின் பேரில், திரு ஆலன் சான் ஹெங் லூன் அவர்களுக்குச் சிறப்புப் பணி விருது வழங்கப்படுகின்றது.

# சிறப்புப் பணி விருது

4. **திரு எட்மண்ட் செங் வை விங்** முன்னாள் தலைவர்,
சிங்கப்பூர்ப் பொது விமானப்
போக்குவரத்து ஆணையம்

புகழுரை

திரு எட்மண்ட் செங் வை விங், அவர்தம் பொதுச் சேவைத் திறத்தால், விமானப் போக்குவரத்து மையமாகச் சிங்கப்பூரின் நிலையை வலுப்படுத்துவதிலும், முன்னாள் குற்றவாளிகளுக்கான வாய்ப்புகளை மேம்படுத்துவதிலும், நாட்டின் கலை, கலாசாரக் கூறுகளை வளப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றியுள்ளார்.

2018 முதல் 2026 வரை சிங்கப்பூர்ப் பொது விமானப் போக்குவரத்து ஆணையத்தின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த அவர், கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் மட்டுமன்றி, அதனைத் தொடர்ந்து விமானப் போக்குவரத்துத் துறை வலுவாக மீண்டெழுந்த காலத்திலும் தீர்க்கமான தலைமைத்துவத்தை வழங்கினார். அவருடைய தலைமையின்கீழ், சிங்கப்பூர்ப் பொது விமானப் போக்குவரத்து ஆணையம் சிங்கப்பூரின் உலகளாவிய நிலையை மேம்படுத்தியது மட்டுமன்றி, 2025ஆம் ஆண்டில் அனைத்துலகப் பொது விமானப் போக்குவரத்து மன்றத்தில் சாதனை அளவிலான வாக்குகளைப் பெற்று மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மஞ்சள் நாடா நிதி, மஞ்சள் நாடா பாரமரிப்பு ஆகிய இயக்கங்களின் தலைவராக, முன்னாள் குற்றவாளிகளுக்கான இரண்டாவது வாய்ப்புகளை அவர் முன்னிறுத்தினார். தனியார் துறையுடனான பங்காளித்துவங்களை வலுப்படுத்தி, கல்வி, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு ஆகியவை சார்ந்த வளங்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்கும் அவர்கள்தம் குடும்பங்களுக்கும் ஆதரவளித்தார்.

சிங்கப்பூர்க் கலை அரும்பொருளகத்தின் தலைவராகவும், தேசியக் கலை மன்றத்தின் முன்னாள் தலைவராகவும் சேவையாற்றிய அவர், சிங்கப்பூரின் கலை, கலாசார வளர்ச்சிக்கு வித்திட்டதுடன், கலைஞர்களுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தி, பொதுமக்கள் கலைகளை மேலும் எளிதில் அணுகத்தக்க சூழமைவுகளை உருவாக்க முற்பட்டார்.

சிங்கப்பூரின் பொருளியல், சமுதாய, பண்பாட்டுத்துறை முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிய தனிச்சிறப்புமிக்க பங்களிப்புகளின் பேரில், திரு எட்மண்ட் செங் வை விங் அவர்களுக்குச் சிறப்புப் பணி விருது வழங்கப்பெறுகின்றது.

5. **டாக்டர் இஸ்கந்தர் ஜலில்** கலைஞர்

புகழுரை

சிங்கப்பூர் மட்பாண்டக் கலைத்துறையில் முதன்மை வல்லுநராகப் போற்றப்படும் டாக்டர் இஸ்கந்தர் ஜலில், சமகால மட்பாண்டக் கலையை ஒரு கலைத்துறையாக மேம்படுத்துவதில் முன்னோடியாகப் பங்காற்றியுள்ளார்.

ஜப்பானியத் தத்துவவியல் அம்சங்களையும் தென்கிழக்காசிய அழகியல் கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டு, டாக்டர் இஸ்கந்தர் ஜலில் தமக்கென தனித்துவமான கலை பாணி ஒன்றை உருவாக்கிக்கொண்டார். அவற்றுள் அவருடைய முத்திரைப் பதிப்பாகக் கருதப்படும் "இஸ்கந்தர் நீலம்" பாணியும், தொட்டுணரவல்ல வடிவங்களும் அடங்கும். அவருடைய படைப்புகள் அன்றாடப் பாத்திரம் தொட்டு பொது விற்பனைக்கான பிரதான படைப்புகள் வரை படர்ந்து விரிந்துள்ளன. அவை அனைத்துலக அளவில், கண்காட்சிகளில் இடம்பெற்றுள்ளன; சேகரிக்கப்பட்டுள்ளன.

டாக்டர் இஸ்கந்தர் ஜலில், மலாய் மரபுடைமை நிலையம், ஜாலான் பஹார் களிமண் கலைக்கூடம் ஆகியவற்றில் மட்பாண்டக் காட்சியகத்தை நிறுவியுள்ளார். அதுமட்டுமன்றி, தெமாசெக் பலதுறைத் தொழிற்கல்லூரியில் 'தெமாசெக் Potters' என்ற மட்பாண்டக் கலைக்கூடத்தையும் அவர் தோற்றுவித்துள்ளார். பல்லாண்டுகால கற்பித்தல், வழிகாட்டுதல்மூலம் அவர் பல தலைமுறைகளைச் சேர்ந்த மட்பாண்டக் கலைஞர்களை ஊக்குவித்து, சிங்கப்பூரின் மட்பாண்டச் சமூகத்தை உருவாக்கத் துணைநின்றுள்ளார். சிங்கப்பூருக்கும் ஜப்பானுக்கும் இடையிலான கலாசாரப் பரிமாற்றத்திற்கும் அவர் முக்கிய பங்காற்றி, இரு நாட்டு மக்கள் நிலையில் நல்லுறவை வலுப்படுத்தியுள்ளார்.

சிங்கப்பூரின் கலை, கலாசார வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய தனித்துவமான பங்களிப்புகளுக்காகவும், அனைத்துலக அரங்கில் சிங்கப்பூரின் கலை ஆளுமையை கோலோச்சியதற்காகவும், டாக்டர் இஸ்கந்தர் ஜலில் அவர்களுக்குச் சிறப்புப் பணி விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.

6. **உஸ்தாஸ் முகமது ஹஸ்பி பின் ஹசான்** இணைத் தலைவர், சமய மறுவாழ்வுக் குழு

புகழுரை

உஸ்தாஸ் முகமது ஹஸ்பி பின் ஹசான், சிங்கப்பூரின் மத நல்லிணக்கத்தையும் சமுதாயப் பிணைப்பையும் பாதுகாப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார்.

சமய மறுவாழ்வுக் குழுவின் இணை நிறுவனராகவும் இணைத் தலைவராகவும் விளங்கும் உஸ்தாஸ் ஹஸ்பி, பயங்கரவாதத்திற்கான சிங்கப்பூரின் எதிர்ப்பு நடவடிக்கையின் முக்கிய தூணாக சமய ஆலோசனை முறைமைகளை நிலைநிறுத்தத் துணைபுரிந்தார். தீவிரவாத சித்தாந்தங்களால் ஈர்க்கப்பட்டோருக்கு ஆலோசனைச் சேவைகள் வழங்க, உஸ்தாஸ் ஹஸ்பி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். தீவிரவாத சித்தாந்தங்களை எதிர்கொள்வதற்கான வளங்களை உருவாக்குதல், குடும்பங்கள், இளையர், பரந்துபட்ட சமூகம் என எல்லாத் தரப்பு மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட வழிகளில் அவர் அரும்பணியாற்றினார். அவருடைய தலைமைத்துவத்தில் சமய மறுவாழ்வுக் குழு, தீவிரவாத சித்தாந்தங்களை எதிர்க்கும் பொருட்டு, நம்பகமான சமய வழிகாட்டுதலுக்குரிய தளமாக உருமாறியுள்ளது.

அப்போதைய PERGAS அமைப்பின் தலைவராக, உஸ்தாஸ் ஹஸ்பி, சமய மறுவாழ்வுக் குழுவை ஆதரிக்கவும் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றவும் அசாதிஸா துறையினரை ஒன்றுதிரட்டினார். அவர் சமயத் தலைவர்கள், சமூக அமைப்புகள், அரசாங்க அமைப்புகள் ஆகியோரிடையே வலுவான பங்காளித்துவத்தை உருவாக்கி, தீவிரவாதத்தை எதிர்கொள்வதில் ஒருங்கிணைந்த சிங்கப்பூர் அணுகுமுறையை வலுப்படுத்தப் பங்காற்றினார். குறிப்பாக, 2023 இஸ்ரேல்-ஹமாஸ் மோதலின் போது, அவர் அமைதியான, சமநிலை மிகுந்த, கோட்பாட்டு நிலையிலான சமய வழிகாட்டுதலை நல்கி, சமூகம் உணர்வுபூர்வமான அந்தப் பிரச்சினையைக் கடந்து செல்லவும் நல்லிணக்கத்தைப் பேணவும் துணைநின்றார்.

சிங்கப்பூர் இஸ்லாமியச் சமய மன்ற ஃபத்வா குழுவின் மூத்த இணை உறுப்பினராக, அவர் அதன் கருத்தாடல்களுக்குத் தமது சமயம் சார்ந்த நிபுணத்துவத்தை வழங்கி, இஸ்லாமியக் கல்வி தொடர்ந்து ஏற்புடையதாகவும் எளிதில் கிடைக்கப்பெறவல்லதாகவும் இருப்பதை உறுதிசெய்யும் மேம்பட்ட முயற்சிகளை முன்னிலைப்படுத்தினார்.

சிங்கப்பூரில் மத நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதில் தனிச்சிறப்புமிக்க சேவை ஆற்றியதன் பேரில், உஸ்தாஸ் முகமது ஹஸ்பி பின் ஹசான் அவர்களுக்குச் சிறப்புப்

பணி விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.

7. **திரு பாப் டான் பெங் ஹாய்** முன்னாள் தலைவர்,
செந்தோசாத்தீவு
மேம்பாட்டுக் கூட்டுநிறுவனம்

புகழுரை

முப்பது ஆண்டுக்கும் மேலாக, திரு பாப் டான் பெங் ஹாய் சிங்கப்பூருக்குப் பல்வேறு வழிகளில் பங்காற்றியுள்ளார்.

2019 முதல் 2026 வரை, செந்தோசாத்தீவு மேம்பாட்டுக் கூட்டுநிறுவனத்தின் தலைவராக, முன்னணிப் பொழுதுபோக்குத் தலமாகச் செந்தோசாவின் நிலையை வலுப்படுத்தியது மட்டுமன்றி, செந்தோசா பெருந்திட்டத்தை வகுப்பதற்கும் அவர் வழிகாட்டினார். கொவிட்-19 பெருந்தொற்றுக் காலகட்டத்திலும், ஜூன் 2024 எண்ணெய்க் கசிவு சம்பவத்தின்போதும் அவர் தீர்க்கமிகு தலைமைத்துவத்தை வழங்கி, செந்தோசாத்தீவை இவ்விரண்டு இடர்ப்பாடுகளிலிருந்தும் விரைந்து மீண்டெழத் துணைபுரிந்தார்.

முத்தரப்புப் பங்காளித்துவத்தின் வலுவான ஆதரவாளராக, தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ், சிங்கப்பூர்த் தேசிய முதலாளிகள் சம்மேளனம், முத்தரப்புக் கூட்டணி ஆகிய அமைப்புகளில் திரு டான் முக்கிய பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார். தொழிலாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துதல், வேலையிடப் பாதுகாப்பு, சமரசப் பேச்சுவார்த்தை ஆகியவற்றை முன்னிறுத்துதல், ஊழியர்கள் பொழுதுபோக்கு வசதிகளையும் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளையும் மேலும் எளிதில் பெறுவதற்கான கட்டமைப்பை விரிவுபடுத்துதல் ஆகிய வழிகளில் அவர் முக்கிய பங்காற்றினார்.

2021 முதல் SBS Transit நிறுவனத்தின் தலைவராக, கொவிட்-19 பெருந்தொற்றுக் காலகட்டத்திலும், டௌண்டவுன் ரயில் பாதை புதிய ரயில் நிதியுதவிக் கட்டமைப்புக்கு மாறிய சமயத்திலும், அந்நிறுவனத்தை வழிநடத்தி, ரயில் சேவையின் நம்பகத்தன்மை உயரிய நிலையில் கட்டிக்காக்கப்படுவதை அவர் உறுதிசெய்தார்.

தொழில்நுட்பக் கல்விக்கழகத்தின் ஆளுநர் நிர்வாகக் குழுவில் 21 ஆண்டு சேவையாற்றிய திரு டான், 12 ஆண்டுக்கு அக்குழுவின் தலைவராகப் பொறுப்பு வகித்தார். தொழில்துறைப் பங்காளித்துவத்தை வலுப்படுத்தி, வேலை-கல்வி பட்டயக் கல்வித் திட்டங்களை விரிவுபடுத்தி, மாணவர்கள் கல்வியிலிருந்து வேலைக்குச் செல்லக்கூடிய பாதைகளை அவர் மேம்படுத்தினார்.

சிங்கப்பூரின் பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்கு ஆற்றிய அளப்பரிய

பங்களிப்புகளின் பேரில், திரு பாப் டான் பெங் ஹாய் அவர்களுக்குச் சிறப்புப் பணி விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

## பாராட்டுப் பணிப் பதக்கம்

8. **டாக்டர் பெ ஸ்வான் கின்** நிரந்தரச் செயலாளர்,
வர்த்தக, தொழில்துறை அமைச்சு

புகழுரை

டாக்டர் பெ ஸ்வான் கின், சிங்கப்பூரின் பொருளியல் மேம்பாட்டுக்கும் நீண்டகாலப் போட்டித்தன்மைக்கும் தலைசிறந்த பங்களிப்புகளை ஆற்றியுள்ளார்.

வர்த்தக, தொழில்துறை அமைச்சின் நிரந்தரச் செயலாளராக, சிங்கப்பூரின் பொருளியல் உத்தியை நிர்மாணிக்க உதவியுள்ளார் – பொருளியல் உத்தி மறு-ஆய்வு உள்பட. எரிசக்தி மீள்திறனை வலுப்படுத்தவும், குறைவான கரியமில வாயு வெளியேற்றத்தைக் கொண்ட பொருளியலை நோக்கிய சிங்கப்பூரின் பயணத்தைத் துரிதப்படுத்தவும் அமைச்சின் எரிசக்தி, கரிமக் குழுமத்தையும் அவர் தோற்றுவித்தார்.

2014 முதல் 2023 வரை பொருளியல் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்த டாக்டர் பெ, தொழில், புத்தாக்கம் ஆகியவற்றுக்கான உலகளாவிய மையமாகச் சிங்கப்பூரின் நிலையை வலுப்படுத்தினார். மேம்பட்ட உற்பத்தி, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் முக்கிய முதலீடுகளை ஈர்த்ததுடன், வளர்ச்சிக்கான புதிய துறைகளை உருவாக்குவதிலும் அவர் உதவினார். கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தின்போது, தடுப்பூசிகளை முன்கூட்டியே பெறுவதில் அவர் முக்கிய பங்காற்றி, தேசியத் தடுப்பூசித் திட்டத்தை அமல்படுத்திய முதல் நாடுகளில் ஒன்றாகச் சிங்கப்பூர் திகழத் துணைநின்றார்.

சிங்கப்பூரின் பொருளியல் போட்டித்தன்மைக்கும் மீள்திறனுக்கும் ஆற்றிய தலைசிறந்த பங்களிப்புகளின் பேரில், டாக்டர் பெ ஸ்வான் கின் அவர்களுக்குப் பாராட்டுப் பணிப் பதக்கம் வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றது.

## பாராட்டுப் பணிப் பதக்கம்

9. **பேராசிரியர் சீ யாம் செங்** தலைவர்,
சிங்கப்பூர் மருத்துவ மன்றம்

புகழுரை

பேராசிரியர் சீ யாம் செங் ஐம்பது ஆண்டுக்கும் மேலாக சிங்கப்பூரின் பொதுச் சுகாதாரத் துறைக்குச் சிறப்புமிக்க பங்களிப்புகளை ஆற்றியுள்ளார்.

2019 முதல் சிங்கப்பூர் மருத்துவ மன்றத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்துவரும் அவர், மருத்துவப் பதிவுச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களால் அமலாக்கம் கண்ட முக்கிய சீர்திருத்தங்களைத் திறம்பட வழிநடத்தினார். நோயாளிகளின் பாதுகாப்பை வலுப்படுத்தும் அதேவேளையில், சுகாதாரப் பராமரிப்புத் தொழிலருக்கு நியாயமான பணிச் சூழமைவுகளை உறுதிசெய்வதிலும் அவர் முக்கிய பங்காற்றினார். மேலும், சிங்கப்பூர் மருத்துவ மன்றத்தின் நிர்வாகக் கட்டமைப்புகளை மேம்படுத்தி, தொழில்முறைத் தரநிலைகளை வழிநடத்தும் அதன் தலைமைத்துவத்தையும் பேராசிரியர் சீ வலுப்படுத்தினார்.

தேசியச் சுகாதாரக் குழுமத்தில் தலைமைத்துவப் பொறுப்புகளை வகித்துவந்த பேராசிரியர் சீ, சமூக அளவில் மருத்துவப் பராமரிப்புச் சேவைகள் எளிதில் கிடைக்கப்பெறுவதற்கான சூழலை மேம்படுத்தினார். மேலும், குழுமத்தின் மருத்துவ ஆய்வு, கல்விசார் திறனாற்றல்களையும் அவர் வலுப்படுத்தினார். சுகாதாரப் பராமரிப்புக் கொள்கை சார்ந்த சுகாதார அமைச்சின் பல்வேறு குழுக்களில் முக்கிய பங்காற்றிய அவர், பல்வேறு அரசாங்க அமைப்புகளுக்கு வழங்கிய ஆலோசனைமூலம் பரந்துபட்ட பொதுச் சேவைக்கும் பங்களித்துள்ளார்.

சிங்கப்பூரின் சுகாதாரப் பராமரிப்புக் கட்டமைப்புக்கும் மருத்துவத் தொழிலுக்கும் அளப்பரிய பங்காற்றியதன் பேரில், பேராசிரியர் சீ யாம் செங் அவர்களுக்குப் பாராட்டுப் பணிப் பதக்கம் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.

## பாராட்டுப் பணிப் பதக்கம்

10. **திரு எஸ் சந்திர தாஸ்** இலங்கைக்கான முன்னாள்
தொலைதூர உயர் ஆணையர்

புகழுரை

திரு எஸ் சந்திர தாஸ் அரசதந்திரம், தொழில், சமூகம், கல்வி ஆகிய துறைகளில் சிங்கப்பூருக்கு அளப்பரிய பங்காற்றியுள்ளார்.

2006 முதல் 2015 வரை துருக்கியேவுக்கான சிங்கப்பூரின் தொலைதூரத் தூதர், 2015 முதல் 2025 வரை இலங்கைக்கான சிங்கப்பூரின் தொலைதூர உயர் ஆணையர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துவந்த திரு தாஸ், சிங்கப்பூருக்கும் அந்நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்தினார். அவ்வகையில், அவர் இரு நாடுகளுடனும் தடையற்ற வர்த்தக உடன்பாடுகளை நிறைவுசெய்யத் துணைநின்றார். துருக்கியேவுடன் உத்திபூர்வ பங்காளித்துவம், இலங்கையுடன் இரட்டிப்பு வரிவிதிப்புத் தவிர்ப்பு உடன்பாடு ஆகியவை அவற்றுள் அடங்கும்.

தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் நியாயவிலைக் குழுமத்தின் (NTUC FairPrice) தலைவராக, அன்றாட அத்தியாவசியப் பொருள்களைக் கட்டுப்படியான விலையில், அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் அதன் சமூக இலக்கை திரு தாஸ் பெருமளவு முன்னெடுத்துச் சென்றார். இந்தியச் சமூகத்தின் நன்மதிப்பிற்குரிய தலைவராகப் போற்றப்படும் அவர், சிங்கப்பூர் இந்தியர் நல்வாழ்வுச் சங்கம், சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கம் ஆகியவற்றை நிறுவுவதில் முக்கிய பங்காற்றினார். நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக ஆக நீண்டகாலம் சேவையாற்றிய திரு தாஸ், பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்குப் பங்களித்தார்.

சிங்கப்பூருக்கு ஆற்றிய சிறப்புமிக்க, பன்னோக்குடைய சேவைகளின் பேரில், திரு எஸ் சந்திர தாஸ் அவர்களுக்குப் பாராட்டுப் பணிப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

## பாராட்டுப் பணிப் பதக்கம்

11. **திருவாட்டி அனிதா ஃபாம் சியூ பிங்** முன்னாள் தலைவர், தேசியச் சமூகச் சேவை மன்றம்

புகழுரை

முப்பது ஆண்டுக்கும் மேலாக, திருமதி அனிதா ஃபாம் சியூ பிங் சிங்கப்பூரின் சமூகச் சேவைத் துறைக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை ஆற்றியுள்ளார்.

தேசியச் சமூகச் சேவை மன்றத்தின் தலைவராக, திருமதி ஃபாம் சமூகச் சேவை அமைப்புகளின் திறனாற்றல்களையும் மீள்திறனையும் வலுப்படுத்தியுள்ளார். அவர், சமூகச் சேவைத் துறையின் உத்திபூர்வ வரைவுத்திட்டத்தை உருவாக்கி அமல்படுத்தும் முறைமைகளுக்குத் தலைமையேற்றார்; சமூக ஆற்றல் அறக்கட்டளை நிதியை நிறுவினார்; கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில், சமூகச் சேவைத் துறையைத் திறம்பட வழிநடத்தினார். இளையருக்கான சிங்கப்பூரின் முதல் ஒருங்கிணைந்த மனநல நிலையத்தின் மேம்பாட்டையும் அவர் முன்னிறுத்தினார்.

மேலும், உடற்குறையுள்ளோருக்கான மூன்றாம் பெருந்திட்ட வழிகாட்டிக் குழு, Assisi அந்திமகாலப் பராமரிப்பு இல்லம், முற்றிய நோய்க்குரிய பராமரிப்புக்கான லியன் நிலையம் (Lien Centre for Palliative Care), வருகையளிக்கும் நீதிபதிகள் கழகம், கண்காணிப்புக் கழகம் ஆகிய அமைப்புகளில் வகித்த தலைமைத்துவப் பொறுப்புகள் வாயிலாக உடற்குறையுள்ளோரை உள்ளடக்குதல், அந்திமகாலப் பராமரிப்பு, சமூக நலன் ஆகியவற்றையும் மேம்படுத்தினார்.

சிங்கப்பூரின் சமூகச் சேவைத் துறைக்கு ஆற்றிய தலைசிறந்த பங்களிப்புகளின் பேரில், திருமதி அனிதா ஃபாம் சியூ பிங் அவர்களுக்குப் பாராட்டுப் பணிப் பதக்கம் வழங்கப்படுகிறது.

## பாராட்டுப் பணிப் பதக்கம்

12. **திரு லிம் சுவான் போ** தலைவர்,
சிங்கப்பூர் உணவு அமைப்பு

புகழுரை

சிங்கப்பூரின் உணவுப் பாதுகாப்பு, அறிவியல் ஆய்வுத்துறை, கல்வி, தற்காப்பு, அனைத்துலக உறவுகள் ஆகிய துறைகளில், திரு லிம் சுவான் போ குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளார்.

சிங்கப்பூர் உணவு அமைப்பின் முதல் தலைவராக, அவர் சிங்கப்பூரின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தினார். கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில், உலகளாவிய விநியோகத் தொடரில் ஏற்பட்ட இடையூறுகளைக் கையாளும் அமைப்பின் முயற்சிகளைத் திரு லிம் வழிநடத்தினார். சிங்கப்பூரின் உணவுப் பாதுகாப்பு குறித்த ஆய்வு, மேம்பாட்டுத் திட்டத்தை (Singapore Food Story) மேம்படுத்தி, புதிதாகக் கண்டறியப்பட்டு உருவாக்கப்படும் உணவு வகைகளைப் பொறுத்தமட்டில், சிங்கப்பூரை முன்னணி நாடாக நிலைநிறுத்தினார்.

அறிவியல், தொழில்நுட்ப ஆய்வு அமைப்பின் தலைவராக, சிங்கப்பூரின் ஆய்வு, புத்தாக்கச் சூழலை வலுப்படுத்தியதோடு, தேசிய அளவிலான அறிவியல் திறனாற்றல்களையும் திரு லிம் மேம்படுத்தினார். லீ கொங் சியன் மருத்துவப் பள்ளியின் முதல் தலைவராக, அதனை நிறுவி, நிர்மாணிக்கும் பணிகளுக்குத் துணைநின்றார். அவருடைய தனிச்சிறப்புமிக்க வாழ்க்கைத்தொழிலில் தற்காப்புப் படைத் தலைவர், கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளர், இஸ்ரேலுக்கான சிங்கப்பூரின் தொலைதூரத் தூதர் ஆகிய பொறுப்புகளை வகித்து வந்துள்ளார்.

சிங்கப்பூருக்கு ஆற்றிய பேரளவிலான பரந்துபட்ட பங்களிப்புகளின் பேரில், திரு லிம் சுவான் போ அவர்களுக்குப் பாராட்டுப் பணிப் பதக்கம் வழங்கப்படுகிறது.

## பாராட்டுப் பணிப் பதக்கம்

13. **திரு ஜார்ஜ்**
**லிம் தியோங் ஜின்**

தலைவர்,
சிங்கப்பூர் அனைத்துலகச் சமரச நிலையம்

புகழுரை

அனைத்துலக அளவில் சர்ச்சைகளுக்குத் தீர்வு காணும் சமரச நடுவமாகச் சிங்கப்பூரின் நிலையை வலுப்படுத்துவதில் திரு ஜார்ஜ் லிம் தியோங் ஜின் உன்னதப் பங்களிப்புகளை ஆற்றியுள்ளார்.

2017ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூர் அனைத்துலகச் சமரச நிலையத்தின் தலைவராகப் பணியாற்றிவரும் அவர், அந்த அமைப்பை வலுப்படுத்தியதுடன், அதன் உலகளாவியத் தொடர்புகளையும் விரிவுபடுத்தியுள்ளார். வர்த்தகம் சார்ந்த சமரசத் துறையில் அறிவுசார் தலைமைத்துவத்தையும் தொழில்முறைப் பயிற்சியையும் அவர் மேம்படுத்தி வந்துள்ளார்.

சமரசம் குறித்த சிங்கப்பூர் உடன்படிக்கையை உருவாக்கி, நடைமுறைப்படுத்துவதில், திரு லிம் முக்கிய பங்காற்றினார். சிங்கப்பூரின் பெயரைத் தாங்கிய முதலாவது ஐக்கிய நாட்டு ஒப்பந்தம் அது. சமரசத்தின்மூலம் எட்டப்படும் தீர்வு உடன்பாடுகளை அனைத்துலக அளவில் அமல்படுத்தும் ஆற்றலை அந்த உடன்படிக்கை வலுப்படுத்தியது. மேலும், எல்லை கடந்த வர்த்தக சர்ச்சைகளைத் தீர்ப்பதற்குரிய நம்பகமான வழிமுறையாகச் சமரச முறையை அது உறுதிப்படுத்தியது. அரசாங்கங்கள், சட்டத்துறைத் தொழிலர், தொழில் தலைவர் ஆகியோரிடையே அந்த உடன்படிக்கையின் பயன்பாட்டை அதிகரிக்கும் முயற்சிகளைத் திரு லிம் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்.

சிங்கப்பூரின் அனைத்துலகச் சட்ட நிலைப்பாட்டிற்கு ஆற்றிய குறிப்பிடத்தக்கப் பங்களிப்புகளின் பேரில், திரு ஜார்ஜ் லிம் தியோங் ஜின் அவர்களுக்குப் பாராட்டுப் பணிப் பதக்கம் வழங்கப்படுகிறது.

14. **வைஸ் அட்மிரல்** தற்காப்புப் படைத் தளபதி
**ஆரோன் பெங் யாவ் செங்** சிங்கப்பூர் ஆயுதப்படை

புகழுரை

வைஸ் அட்மிரல் ஆரோன் பெங் யாவ் செங், சிங்கப்பூர்த் தற்காப்பின் பொருட்டு தமது வாழ்க்கைத்தொழில் முழுவதையும் அர்ப்பணித்துள்ளார். பல்வேறு தளபத்திய, படைசார், தலைமைத்துவப் பொறுப்புகளை வகித்துள்ள அவர், இறுதியில் தற்காப்புப் படைத் தளபதியாக, சிங்கப்பூர் ஆயுதப்படைகளின் செயற்பாட்டு ஆயத்தநிலையை உறுதிசெய்து, சிங்கப்பூரின் அரசுரிமையைப் பாதுகாத்தார். காசா, வியட்நாம் ஆகிய நாடுகளில் மனிதாபிமான உதவி, ரியாத், ஜெட்டா ஆகிய நாடுகளிலிருந்து குடிமக்கள் நாடு திரும்புவதற்கான மீட்பு நடவடிக்கைகள், கடல்சார் பாதுகாப்புப் பணிகள் உள்ளிட்ட வெளிநாட்டு நடவடிக்கைகளையும் அவர் மேற்பார்வையிட்டுள்ளார்.

தற்காப்புப் படைத் தளபதியாக, சிங்கப்பூர் ஆயுதப்படை மேலும் ஒருங்கிணைந்த, மின்னிலக்கமயமான, தகவமைக்கவல்ல படையாக உருமாறுவதை வைஸ் அட்மிரல் பெங் வழிநடத்தினார். நீண்டகாலத் திறனாற்றல் திட்டமிடுதலை வலுப்படுத்தியதுடன், பல்வகை அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளத் தேவையான புதிய செயற்பாட்டுக் கருத்தாக்கங்களையும் அவர் வகுத்தார். மேலும், முக்கிய வெளிநாட்டு ஆயுதப்படைகளுடனான பாதுகாப்பு உறவுகளையும் தொழில்முறை ஒத்துழைப்பையும் அவர் ஆழப்படுத்தினார். குறிப்பாக, இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளுடன் கூட்டு ராணுவப் பயிற்சிகள், இணையப்பாதுகாப்புப் பயிற்சிகள், பன்னாட்டு அளவிலான செயற்பாட்டு ஆயத்தநிலை முயற்சிகள் ஆகியவற்றை அவர் விரிவுபடுத்தினார்.

சிறப்புமிக்க தலைமைத்துவம், அர்ப்பணிப்பு மிகுந்த சேவை ஆகியவற்றை அங்கீகரிக்கும் பேரில், வைஸ் அட்மிரல் ஆரோன் பெங் யாவ் செங் அவர்களுக்குப் பாராட்டுப் பணிப் பதக்கம் (படைத்துறை) வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

## THE PUBLIC SERVICE STAR (BAR)

## பொதுப் பணிச் சிறப்புப் பதக்கம் (பதக்கப் பட்டை)

## THE PUBLIC SERVICE STAR

## பொதுப் பணிச் சிறப்புப் பதக்கம்

புகழுரை

சமூகத்திற்குச் சேவையாற்றி, பிறர் வாழ்வை மேன்மையுறத் தொண்டாற்றிய மாந்தர் அனைவரையும் இன்று நாம் பெருமைப்படுத்துகிறோம். சிங்கப்பூரை மேலும் சிறந்த நாடாக உருவகப்படுத்துவதில் பங்காற்றிய அனைவரின் முயற்சிகளையும் அங்கீகரிக்கும் முனைப்பாக, இத்தகையோருக்குப் பொதுப் பணிச் சிறப்புப் பதக்கம் (பதக்கப் பட்டை), பொதுப் பணிச் சிறப்புப் பதக்கம் ஆகியவை வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது. அவர்களின் தன்னலமற்ற சேவைக்கும், தன்னிகரற்ற பங்களிப்புக்கும் நம் தாய்த் திருநாட்டின் நன்றிகள் பல கோடி உரித்தாகுக.

## பொது ஆட்சித்துறைப் பதக்கம் (தங்கம்) (பதக்கப் பட்டை)

15. **திருவாட்டி ஜாக்லின் லோ வாய் யின்**

துணை நிர்வாக இயக்குநர்
(நிறுவன மேம்பாடு)
நிர்வாக இயக்குநர் அலுவலகம்,
சிங்கப்பூர் நாணய ஆணையம்

புகழுரை

திருவாட்டி ஜாக்லின் லோ வாய் யின், சிங்கப்பூரின் வங்கித்துறை, நிதிசார் வளர்ச்சி, நிறுவனச் செயல்பாடுகள் உள்ளிட்ட சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் பணிகளில் முன்மாதிரிச் சேவையாற்றியுள்ளார். துணை நிர்வாக இயக்குநராக, அவர் சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் மீள்திறனையும் திறனாற்றலையும் வலுப்படுத்தியதோடு, உலகளவில் முன்னணி நிதி நடுவமாகச் சிங்கப்பூரின் நிலையை மறுவுறுதிப்படுத்தினார். மேலும், அவர் எதிர்காலத்திற்கு ஆயத்தமான நிதித்துறை ஊழியரணியை உருவாக்கும் முயற்சியை வழிநடத்தியதோடு, சிங்கப்பூரின் மின்னிலக்கப் பொருளியலை ஆதரிக்கும் தேசிய அளவிலான பிரதான கட்டண உள்கட்டமைப்பையும் மேற்பார்வையிட்டார். வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் வாரிய உறுப்பினர், உள்துறைக் குழுவின் INVEST முதலீட்டுக் குழுத் தலைவர் ஆகிய பொறுப்புகள் தவிர, அனைத்துலக வங்கித்துறைக் கருத்தரங்குகளில் பங்கேற்று, பரந்துபட்ட பொதுச் சேவைத் துறைக்கு அவர் தமது நிபுணத்துவத்தை வழங்கியுள்ளார்.

16. **திரு சியூ சியோங் தாய் டேவிட்**

தலைமை வழக்குரைஞர் (அனைத்துலக ஈடுபாடு)
குற்றப் பிரிவு,
அரசாங்கத் தலைமைச் சட்ட அதிகாரி அலுவலகம்

புகழுரை

திரு சியூ சியோங் தாய் டேவிட் 2015 முதல் 2026 வரை வர்த்தகக் குற்ற விசாரணைப் பிரிவின் இயக்குநராகத் தன்னிகரற்ற தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார். தொழில்நுட்பப் பயன்பாடு, அரசாங்க அமைப்புகள், அனைத்துலகப் பங்காளிகளுடனான பயன்மிக்க ஒத்துழைப்பு ஆகியவற்றின்மூலம் சிங்கப்பூரின் நிதிசார் குற்றங்களை எதிர்கொள்ளும் திறனாற்றல்களை அவர் உருமாற்றினார். வர்த்தகக் குற்ற விசாரணைப் பிரிவின் செயல்பாடுகளில் தரவுப் பகுப்பாய்வின் பயன்பாட்டை மேம்படுத்திய அவர், சிங்கப்பூரின் பணமோசடித் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தினார்; அனைத்துலக அளவில் அங்கீகரிக்கப்பெற்ற மோசடித் தடுப்பு முயற்சிகளை முன்னின்று வழிநடத்தினார். நிதிசார் நடவடிக்கை பணிக்குழுவில் சிங்கப்பூரைப் பிரதிநிதித்து, சிங்கப்பூரின் நலன்களை முன்னெடுத்துச் சென்றதுடன், பணமோசடி, பயங்கரவாத நிதியுதவி ஆகியவற்றுக்கு எதிரான உலகளாவிய முயற்சிகளுக்கும் அவர் பங்களித்தார்.

17. **திரு P. சிவ சண்முகம்**

செயலாளர்,
நீதித்துறைச் சேவை ஆணையம்,
நீதித்துறை

புகழுரை

நீதித்துறை, சட்டத்துறைச் சேவைகள் 2022ஆம் ஆண்டில் புதிதாக நிறுவப்பெற்றது முதல், அவற்றை வழிநடத்துவதில் தன்னிகரற்ற தலைமைத்துவத்தைத் திரு P. சிவ சண்முகம் வெளிப்படுத்தியுள்ளார். சம்பளக் கட்டமைப்பு, வாழ்க்கைத்தொழில் முன்னேற்றம், போட்டித்திறன் அடிப்படையிலான திறன் மேம்பாடு ஆகியவற்றில் இரு துறை சார்ந்த முக்கிய சீர்திருத்தங்களை அவர் வழிநடத்தினார். அதன்மூலம், இரு துறைகளின் தடையற்ற உருமாற்றத்தை உறுதிசெய்து, திறனாளர்களை ஈர்த்து, மேம்படுத்தி, தக்கவைத்துக்கொள்வதற்கான அவற்றின் ஆற்றலையும் அவர் வலுப்படுத்தினார். நீதித்துறை, சட்டத்துறைச் சேவைகளின் உன்னதநிலையையும்,

அமைப்புசார் மீள்திறனையும் தொடர்ந்து கட்டிக்காப்பதற்கு, அவருடைய தலைமைத்துவம் வலுவான அடித்தளத்தை அமைத்தது. மேலும், திரு சண்முகம் நீதித்துறையில் வட்டார நீதிபதி, மரண விசாரணையாளர், துணைப் பதிவாளர், நடுவர் மன்ற நீதிபதி உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் தொடர்ந்து சேவையாற்றி வருகிறார்.

18. **முனைவர் லீ துங் ஜீன்** துணைச் செயலாளர்
(கலாசாரம், விளையாட்டு)
கலாசார, சமூக, இளையர்துறை அமைச்சு

புகழுரை

முனைவர் லீ துங் ஜீன் சிங்கப்பூரின் கலாசாரம், விளையாட்டு, சமூக மேம்பாடு உள்ளிட்ட துறைகளுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை ஆற்றியுள்ளார். துணைச் செயலாளராக (கலாசாரம், விளையாட்டு), சிங்கப்பூர் விளையாட்டு நடுவத்தின் நிர்வாகப் பொறுப்பேற்பு, காலாங் அலைவ் பெருந்திட்டம், எஸ்ஜி கலாசாரச் சிறப்புத்தொகை, முக்கிய கலை உள்கட்டமைப்புத் திட்டங்கள் உள்ளிட்ட பெரு முயற்சிகளை அவர் வழிநடத்தினார். முன்னதாக, பாலர் பருவ மேம்பாட்டு அமைப்பின் முதல் தலைமை நிர்வாக அதிகாரியாகவும், சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சின் முதல் துணைச் செயலாளராகவும், அவர் KidSTART திட்டத்தை நிறுவினார். அத்துடன், சமுதாயச் சட்டங்கள், மாதர் மேம்பாடு ஆகியவற்றை முன்னெடுத்துச் சென்ற அவர், உடற்குறையுள்ளோர், எளிதில் பாதிப்படையக்கூடிய தனிநபர், குடும்பங்கள் ஆகியோருக்கான ஆதரவையும் வலுப்படுத்தினார்.

19. **திரு ஜிம்மி தோ யொங் லெங்** தலைமை நிர்வாக இயக்குநர்,
மக்கள் கழகம்

புகழுரை

திரு ஜிம்மி தோ யொங் லெங், பொதுச் சேவைக்குத் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை ஆற்றியுள்ளார். மக்கள் கழகத்தின் தலைமை நிர்வாக இயக்குநராக, கழகத்தின் உருமாற்றப் பயணத்தை 'சமூகம் 2030' திட்டத்தின் வாயிலாக அவர் வழிநடத்தினார். "முதலில் நாம்" (We First) என்ற கருதுகோள் அடிப்படையிலான சமூகம் நோக்கிய கழகத்தின் இலக்கைப் புதுப்பித்த அவர், அதன் தொண்டூழியர் அணியை

28,000-க்கும் அதிகமாக விரிவுபடுத்தினார். மக்கள் கழகத்தின் தலைமைத்துவ அணியை வலுப்படுத்தியதோடு, எஸ்ஜி60, மக்கள் கழகம் 65 உள்ளிட்ட மைல்கல் கொண்டாட்டங்களை வழிநடத்தி, சிங்கப்பூரர்களை ஒன்றிணைத்தார்; குடிமக்கள் ஈடுபாட்டை வளப்படுத்தினார். அரசாங்கத் துணைத் தலைமைத் தொடர்பு அதிகாரியாக (செயல்பாடுகள்), திரு தோ தொடர்புத்துறைச் செயல்பாடுகளை மேம்படுத்தி, அரசாங்கம் முழுமைக்குமான தேசிய அளவிலான செய்தித் தொடர்புமுறையை வலுப்படுத்தினார்.

20. **திரு சங் செர்ன் வெய்**

கல்வித்துறைத்
துணைத் தலைமை இயக்குநர்
(பாடக்கலைத்திட்டம்)
கல்வி அமைச்சு

புகழுரை

திரு சங் செர்ன் வெய், சிங்கப்பூரின் கல்விமுறையை வலுப்படுத்துவதிலும் மாணவர்களை எதிர்காலத்திற்குத் தயார்படுத்துவதிலும் தம் வாழ்க்கைத்தொழில் முழுவதும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை ஆற்றியுள்ளார்.

கல்வித்துறைத் துணைத் தலைமை இயக்குநராக (பாடக்கலைத்திட்டம்), அவர் பாட உள்ளடக்கத்தின் சுமையைக் குறைத்தல், கருத்தாக்க அடிப்படையிலான புரிதலை ஆழப்படுத்துதல், பல்துறை சார்ந்த சுய கற்றலை ஊக்குவித்தல் உள்ளிட்ட பாடக்கலைத்திட்டச் சீர்திருத்தங்களை முன்னின்று வழிநடத்தினார். திரு சங், கற்றல் - கற்பித்தலைத் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு ஆகியவை கொண்டு உருமாற்றும் முனைப்பில் கல்வித் தொழில்நுட்பப் பெருந்திட்டம் 2030யை வழிநடத்தினார்.

பாடக்கலைத்திட்டம், கற்பித்தல் முறைமைகள், கல்வித் தொழில்நுட்பம் ஆகியவற்றில் தமது நீடித்த தலைமைத்துவத்தின்மூலம், திரு சங் கல்விச் சேவையின் தரத்தையும் எதிர்காலத் தயார்நிலையையும் வலுப்படுத்தியுள்ளார்.

21. **திருவாட்டி லிம் வான் யோங்** நிரந்தரச் செயலாளர் (கல்வி),
கல்வி அமைச்சு

புகழுரை

திருவாட்டி லிம் வான் யோங் சிங்கப்பூரின் கல்வி, சமுதாயத் துறைகளில் பெருமளவு முக்கியவத்துவம் வாய்ந்த பங்களிப்புகளை ஆற்றியுள்ளார். கல்விக்கான நிரந்தரச் செயலாளராக, அவர் பொதுவான கல்வி மட்டுமன்றி, உயர்நிலைக்குப் பிந்தைய கல்வி, சிறப்புக் கல்வி ஆகியவற்றிலும் சீர்திருத்தங்களைத் தலைமையேற்று வழிநடத்தினார். மேலும், அவர் ஆசிரியர் தொழிலை வலுப்படுத்துதல், வாழ்நாள் கற்றலுக்கான வழிவகைகளை விரிவுபடுத்துதல் உள்ளிட்ட அம்சங்களிலும் கவனம் செலுத்தினார்.

சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சில், அவர் உடற்குறையுள்ளோருக்கு வேலை நியமன ஆதரவை மேம்படுத்தியதுடன், மாதர் மேம்பாட்டை ஆதரிக்கும் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் முனைப்பு காட்டினார்.

திருவாட்டி லிம் தமது 26 ஆண்டுகால தனிச்சிறப்புமிக்க பொதுச் சேவையில், சிங்கப்பூரர் யாவரும் கற்பதற்கும், பணிபுரிவதற்கும், சமுதாயத்தில் மேலும் நிறைவாக பங்கேற்பதற்கும் வாய்ப்புகளை வலுப்படுத்தினார்.

22. **திரு கெவின் ஷம் ஜின்-சியி** துணைச் செயலாளர்
(திட்டமிடல் பிரிவு)
நிதி அமைச்சு

புகழுரை

முப்பது ஆண்டுக்கும் மேலாக, திரு கெவின் ஷம் ஜின்-சியி, பொதுச் சேவைத் துறையில் தனிச்சிறப்புமிக்க பங்களிப்புகளை ஆற்றியுள்ளார். 2023 முதல், நிதி அமைச்சின் திட்டமிடல் பிரிவின் துணைச் செயலாளராக, அவர் பொருளாதார நிதிநிலைக்கான திட்டமிடுதலையும், வருடாந்தர வரவுசெலவுத் திட்டத்தையும் வழிநடத்தி, நம் நாட்டின் நிதியிருப்புகளைப் பாதுகாக்கவும் துணைபுரிந்தார். லாப வரிக் குறைப்பு, லாபத் தொகைப் பெயர்ப்பு உத்திமுறைத் திட்டத்திற்கான (BEPS 2.0) சிங்கப்பூரின் அணுகுமுறை உள்ளிட்ட முக்கிய சமுதாய, பொருளியல் கொள்கைகளை

அவர் வகுத்துள்ளார். மேலும், சிங்கப்பூர்க் குதிரைப் பந்தய மன்றத்தின் உருமாற்றத்தையும் அவர் மேற்பார்வையிட்டார். போக்குவரத்து அமைச்சிலும் சிங்கப்பூர்ப் பொது விமானப் போக்குவரத்து ஆணையத்திலும் அவர் வகித்த முந்தைய பொறுப்புகளில், திரு ஷம் விமானப் போக்குவரத்துத் துறையை வலுப்படுத்தி, சாங்கி விமானநிலையத்திற்கு வருகைபுரியும் பயணிகளின் எண்ணிக்கை சாதனை அளவை எட்டத் துணைபுரிந்தார். அதுமட்டுமன்றி, அவர் விமானப் போக்குவரத்துத்துறையை கொவிட்-19 கிருமித்தொற்றுக் காலத்தில் திறம்பட முன்னெடுத்துச் சென்றார். மேலும், இந்தோனேசியாவிற்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான விமானத் தகவல்களுக்கான ஆகாயவெளி வட்டார ஒப்பந்தத்தின் பேச்சுவார்த்தையையும் அவர் வழிநடத்தினார்.

23. **திரு வோங் வீ குவென்**

உயர் ஆணையர்,
புது தில்லியில் உள்ள
சிங்கப்பூர் உயர் ஆணையம்,
வெளியுறவு அமைச்சு

புகழுரை

சிங்கப்பூரின் வெளியுறவுக் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதில் திரு வோங் வீ குவென் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை ஆற்றியுள்ளார். 2015 முதல் 2020 வரை தைப்பேயில் சிங்கப்பூரின் வர்த்தகப் பிரதிநிதியாகப் பணியாற்றிய அவர், இரு தரப்பு உறவுகள் குறித்த சிங்கப்பூரின் உத்திமுறையை மேம்படுத்தினார். 2020 முதல் இந்தியாவுக்கான சிங்கப்பூரின் உயர் ஆணையராக, கொவிட்-19 பெருந்தொற்றுச் சவால்களுக்கு இடையில், சிங்கப்பூர்-இந்தியப் பங்காளித்துவத்தை அவர் வலுப்படுத்தினார். ஒத்துழைப்புக்கான புதிய துறைகளை அடையாளம் கண்ட அவர், முக்கிய பங்காளிகளுடனான ஈடுபாட்டை ஆழப்படுத்தினார். மேலும், இரு நாட்டுக்கிடையிலான உத்திபூர்வ ஒத்துழைப்புக்கு வழிவகுக்கும் நோக்கில், 2022ஆம் ஆண்டில் இந்தியா-சிங்கப்பூர் அமைச்சர்நிலையிலான வட்டமேசைச் சந்திப்பை நிறுவுவதற்கும் அவர் துணைபுரிந்தார்.

## பொது ஆட்சித்துறைப் பதக்கம் (தங்கம்)

24. **திரு லூக் கோ பெங் ஈ** நிரந்தரச் செயலாளர், சட்ட அமைச்சு
நிரந்தரச் செயலாளர் (கொள்கை),
வெளியுறவு அமைச்சு

புகழுரை

திரு லூக் கோ பெங் ஈ, 29 ஆண்டுகாலம் சிங்கப்பூருக்கு அர்ப்பணிப்பு உணர்வுடன் தனிச்சிறப்புமிக்க சேவையாற்றியுள்ளார். சட்ட அமைச்சின் நிரந்தரச் செயலாளராக அவர் நீதியானது எளிதில் கிடைக்கப்பெறுவதற்கான வழிவகைகளை மேம்படுத்தி, சட்டத் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை வலியுறுத்தி சட்டத்துறையைப் பெருமளவு வலுப்படுத்தினார். மேலும், அனைத்துலகச் சட்ட நடுவமாகவும், சச்சரவுகளுக்குத் தீர்வு காணும் நடுவமாகவும் சிங்கப்பூர் முன்னணி வகிப்பதை அவர் மறு-உறுதிப்படுத்தினார். வெளியுறவு அமைச்சின் மேம்பாட்டுப் பிரிவுக்கான நிரந்தரச் செயலாளராக, பன்னாட்டு அமைப்புகளுடனான சிங்கப்பூரின் ஈடுபாட்டை அவர் முன்னெடுத்துச் சென்றார். மேலும், 2024 முதல் ஜி20 மாநாடுகளுக்கான சிங்கப்பூரின் பிரதிநிதியாக அவர் அனைத்துலகக் களங்களில் நாட்டின் நலனையும் நிலைப்பாட்டையும் திறம்பட முன்னெடுத்துச் சென்றுள்ளார். அத்துடன், மத்திய கிழக்கு வட்டாரத்தில் உள்ள நட்பு நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றிய அவர், சிங்கப்பூரை நம்பகத்தன்மையும் பொறுப்புணர்வும் மிகுந்த ஆக்கபூர்வ பங்காளியாகச் சித்திரிப்பதில் சிறந்த பங்களிப்பை ஆற்றியுள்ளார்.

25. **பேராசிரியர் இங் வாய் ஹோ** குழுமத் தலைமை நிர்வாக அதிகாரி,
சிங்கப்பூர்ச் சுகாதாரச் சேவைகள்

புகழுரை

பேராசிரியர் இங் வாய் ஹோ, சிங்கப்பூரின் பொதுச் சுகாதாரப் பராமரிப்புக் கட்டமைப்புக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை ஆற்றியுள்ளார். தேசிய நரம்பியல் பயிற்சிக்கழகத்தின் மருத்துவ இயக்குநராகவும், சாங்கி பொது மருத்துவமனையின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றிய அவர், நோயாளிகளின் பராமரிப்பை மேம்படுத்துவதற்காக மருத்துவ ஒருங்கிணைப்பை வலுப்படுத்தியதோடு மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி உள்ளிட்ட அம்சங்களையும் மேம்படுத்தினார். சிங்ஹெல்த் குழுமத்தின் குழுமத் தலைமை நிர்வாக அதிகாரியாக, சமூகப் பொறுப்புணர்வுமிக்க சுகாதார

முறைமைகள், ஒருங்கிணைந்த சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள் ஆகியவற்றிற்கான கட்டமைப்புசார் அணுகுமுறையை அவர் முன்னெடுத்துச் சென்றார். மேலும், எளிதில் கிடைக்கப்பெறவல்ல, உயர்தரத்திலான, நீடித்த நிலைத்தன்மையுடைய பராமரிப்பை வழங்க மின்னிலக்கப் புத்தாக்கத்தையும் ஆராய்ச்சியையும் அவர் வழிநடத்தினார்.

26. **திருவாட்டி ஜீனி டன் பெக் லான்** — முன்னாள் துணைச் செயலாளர் (நிறுவனம்), (உள்துறை அமைச்சு)

புகழுரை

திருமதி ஜீனி டன் பெக் லான், உள்துறை அமைச்சில் நிறுவனப் பிரிவுக்கான துணைச் செயலாளராக முன்மாதிரித் தலைமைத்துவத்தைத் திறம்பட வெளிப்படுத்தியுள்ளார். உள்துறை அமைச்சின் ஊழியரணியை மேம்படுத்துதல், உள்துறைக் குழுவுக்கான மேலும் வலுவான பண்பாட்டு விழுமியங்களை உருவாக்குதல், நிதி நிர்வாகம், நிறுவனச் சேவைகள் உள்ளிட்ட அம்சங்களை மேம்படுத்த மின்னிலக்கமயமாதல் முயற்சிகளை வழிநடத்துதல் ஆகியவற்றின்மூலம் அமைச்சின் திறனாற்றல்களை அவர் வலுப்படுத்தினார். அவர் உள்துறைக் குழுவின் அமைப்புசார் மீள்திறன் வலுப்பெற்று, அதன் பிரிவுகள் யாவும் தத்தம் பொறுப்புகளை மேம்பட்ட வகையில் மேற்கொள்ளத் தமது தலைமைத்துவம் முழுவதும் பாடுபட்டார். அவருடைய தீர்க்கமான சேவை உணர்வுமூலம், அவர் உள்துறை அமைச்சின் செயற்றிறனுக்கும் சிங்கப்பூரின் பாதுகாப்பை நிலைநாட்டுவதற்கும் பங்களித்துள்ளார்.

27. **திரு லியோங் சிங் சியோங்** — துணை நிர்வாக இயக்குநர் (பொருளியல் சந்தை, மேம்பாடு) நிர்வாக இயக்குநர் அலுவலகம், சிங்கப்பூர் நாணய ஆணையம்

புகழுரை

திரு லியோங் சிங் சியோங் 32 ஆண்டுக்கும் மேலாக, சிங்கப்பூர் நாணய ஆணையத்திற்குத் திறம்படச் சேவையாற்றி, சிங்கப்பூரின் நிதித்துறை வளர்ச்சிக்குப் பெருமளவு பங்காற்றியுள்ளார். பொருளியல் சந்தை, மேம்பாட்டுப் பிரிவின் துணை நிர்வாக இயக்குநராக, ஆசியாவில் முன்னிலை வகிக்கக்கூடிய, உலகளாவிய

நிதித்துறை மையமாகச் சிங்கப்பூரின் இடத்தை அவர் வலுப்படுத்தியுள்ளார். மேலும், தொழில்நுட்பம், புத்தாக்கம், நீடித்த நிலைத்தன்மையைக் கருத்தில்கொள்ளும் நிதிசார் முன்னெடுப்புகள், நிதித்துறையின் தொடர்புத்தன்மை, திறன் வளர்ச்சி ஆகியவற்றிலும் அவர் முக்கிய முன்னெடுப்புகளை வழிநடத்தியுள்ளார். சிங்கப்பூர் வெள்ளிக்கான சந்தைச் செயல்பாடுகளையும், நமது அதிகாரபூர்வ வெளிநாட்டு நிதியிருப்புகளின் நிர்வாகத்தையும் அவர் மேற்பார்வையிட்டு, நாட்டின் நாணய, நிதிநிலைக் கட்டமைப்புகளின் நிலைத்தன்மைக்குத் துணைநின்றுள்ளார்.

## பொது ஆட்சித்துறைப் பதக்கம் (தங்கம்) (படைத்துறை)

28. **ரியர் அட்மிரல்** கடற்படைத் தலைவர்,
**ஷோன் வாட் ஜியன்வென்** சிங்கப்பூர்க் கடற்படை

புகழுரை

ரியர் அட்மிரல் ஷோன் வாட் ஜியன்வென், முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு தலைமைத்துவப் பொறுப்புகளில் தனிச்சிறப்புடன் சேவையாற்றியுள்ளார். கடற்படைத் தலைவராக, சிங்கப்பூரின் கடல்சார் பாதுகாப்பையும் அரசுரிமையையும் அவர் கட்டிக்காத்ததுடன், சிங்கப்பூர்க் கடற்படையின் திறனாற்றல் உருமாற்றத்தை வழிநடத்தி, எல்லா நிலைகளிலும் புத்தாக்கத்தை ஊக்குவித்தார். கடற்படைத் தொகுதிகளின் தளபதியாக, கடற்படைப் போர்த் தளவாடங்களின் செயல்பாட்டு ஆயத்தநிலையை அவர் உறுதிசெய்தார். கொள்கை அலுவலக இயக்குநராக, கூட்டு ராணுவப் பயிற்சிகள், உத்திபூர்வக் கலந்துரையாடல்கள், பலதரப்புக் கருத்தரங்குகள் ஆகியவற்றின்மூலம் முக்கிய பங்காளிகளுடனான சிங்கப்பூர் ஆயுதப்படையின் தற்காப்பு உறவுகளை ஆழப்படுத்திய அவர், அதன் ஒத்துழைப்பையும் இணைந்து செயல்படும் திறனையும் வெகுவாக மேம்படுத்தினார்.

29. **பிரிகேடியர் ஜெனரல்** துணைத் தளபதி (ஒருங்கிணைந்த படை)
**சான் சிங் ஹாவ்** தற்காப்புப் படைத் தலைவர் அலுவலகம்
சிங்கப்பூர் ஆயுதப்படை

புகழுரை

பிரிகேடியர்-ஜெனரல் சான் சிங் ஹாவ், தமது ராணுவப் பணிக்காலம் முழுவதும் தனிச்சிறப்புமிக்க சேவையை ஆற்றியுள்ளார். ஒருங்கிணைந்த படைக்கான துணைத் தளபதியாக, பிரிகேடியர் ஜெனரல் சான் சிங்கப்பூர் ஆயுதப்படையின் திறனாற்றல் மேம்பாடு, மின்னிலக்கமயமாதல், நீடித்த நிலைத்தன்மை உள்ளிட்ட முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றார். ஒருங்கிணைந்த செயற்பாடுகளின் இயக்குநராக இருந்தபோது, அவர் சிங்கப்பூரில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளுக்கான பாதுகாப்பு முறைமைகளை வழிநடத்தியது மட்டுமன்றி, காசா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு மனிதாபிமான உதவி நடவடிக்கைகள், ரியாத், ஜெட்டா உள்ளிட்ட நாடுகளிலிருந்து சிங்கப்பூரர்களை நாடு திரும்ப அழைத்து வரும் நடவடிக்கைகள் ஆகியவற்றையும் அவர் மேற்பார்வையிட்டார். அத்துடன், அரசாங்க அமைப்புகளுக்கும் வெளிநாட்டு ராணுவங்களுக்கும் இடையிலான ஒருங்கிணைந்த

செயற்றிறனை அரசு தழுவிய நிலையில் மேம்படுத்துவதன்மூலம், சிக்கலான பாதுகாப்புச் சவால்களுக்குத் தீர்வு காணும் அணுகுமுறைகளை அவர் திறம்படக் கூராக்கினார்.

## THE PUBLIC ADMINISTRATION MEDAL (SILVER) (BAR)

## பொது ஆட்சித்துறைப் பதக்கம் (வெள்ளி) (பதக்கப் பட்டை)

## THE PUBLIC ADMINISTRATION MEDAL (SILVER)

## பொது ஆட்சித்துறைப் பதக்கம் (வெள்ளி)

## THE PUBLIC ADMINISTRATION MEDAL (SILVER) (MILITARY)

## பொது ஆட்சித்துறைப் பதக்கம் (வெள்ளி) (படைத்துறை)

புகழுரை

அரசு நிர்வாகத்தின் உயிர்நாடியாய் மிளிர்வது கொள்கை உருவாக்கத்திற்கும் அமலாக்கத்திற்கும் இடையிலான நுண்ணிய தொடர்பிழையே ஆகும். பொதுச் சேவைத் துறையில் கொள்கைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்து, கருத்துகளைப் பயன்மிக்க பரிந்துரைகளாய் உருமாற்றும் தலையாயப் பணியை நடுத்தர மேலாளர் பலரும் தளராது புரிகின்றனர். உளமார்ந்த உத்வேகம், கரைபுரண்டோடும் கற்பனை வளம், அணையில்லா அர்ப்பணிப்பு உணர்வு ஆகிய விழுமியங்களால் செதுக்கப்பெற்று, தன்னிகரற்ற விளைவுகளை ஈன்றெடுத்த செயல்வீரர் யாவரும் பொது ஆட்சித்துறைப் பதக்கம் (வெள்ளி) வழங்கப்பெற்று, இன்றைய தினம் கௌரவிக்கப்படுகின்றனர்.